Koviloor Digital Library

ஓம்

திருச்சிற்றம்பலம்

விலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 8907
KOVILOOR MADALAYAM
மடாலயம்

திருஅருட்பா

கைவிடேல் எனையே

திருநாவுக்கரசு நாயனார்
உழவாரத் திருக்கூட்டம்
13,A கச்சேரி சாலை
கள்ளக்குறிச்சி–606 202

நான்காம் ஆண்டு விழா

திருக்கூட்டப் புரவலர், அருள்நெறி அரசர்
திரு நா. பூமலை அவர்களின்

77-வது பிறந்தநாள் விழா மலர்

வெளியிடுபவர்:

பேரூர் ஆதீன குருமகா சந்நிதானம்
சீர்வளர் சீர் சாந்தலிங்க இராமசாமி
அடிகளார் அவர்கள் கோவை

திருக்கூட்ட வெளியீடு எண் 16

Koviloor Digital Library

நல மொழிகள்

- இயற்கை வாழ்வே இன்ப வாழ்வு
- கனிகளை உண்போம் பிணிகளை வெல்வோம்
- காய்களைத் தின்றால் நோய்கள் போகும்
- உணவே மருந்து; மருந்தே உணவு
- பச்சை உணவு பாதுகாக்கும்; சமைத்த உணவு சத்து குறைவு
- உண்ணாநோன்பே உயரிய மருந்து
- உணவைக்குடி; நீரை உண்; நீர் உணவு நிறை உணவு
- மலச்சிக்கல் பலச்சிக்கல் நோய்களுக்கு மூலம்
- நாருள்ள பண்டம் மலச்சிக்கலுக்கு மருந்து
- உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
தொப்பை சுருங்குதல் யாவர்க்கும் அழகு
- வாழ்வதற்கு உணவா? உண்பதற்கு வாழ்வா?
- பசித்தே புசிப்பாய். பலகாரம் தவிர்ப்பாய்
- இடைத்தீனி இடையூறு. தோசை மேல் ஆசை அறு
- காப்பியும் டீயும் கனவிலும் வேண்டாம்
- படுக்கை காப்பி படுக்கையில் தள்ளும்
- நொறுங்கத் தின்றால் நூறு வயது
- அருகம்புல் சாறு அன்றாடம் குடி
- உப்பு — ஒரு தப்பு; புகை — உயிர்ப்பகை
- நடை நோய்க்குத் தடை; குடல் சுத்தம் உடல் சுத்தம்
- ஒருவேளை உண்பவன் யோகி
இருவேளை உண்பவன் போகி
மூவேளை உண்பவன் ரோகி
அதற்குமேல் உண்பவன் தேசத்துரோகி

Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்

திரு அருட்பா

கைவிடேல் எனையே

4-ம் ஆண்டு விழா மலர்

திருநாவுக்கரசு நாயனார்
உழவாரத் திருக்கூட்டம்

13-A, கச்சேரிசாலை,

கள்ளக்குறிச்சி-606 202.

15—8—94 திங்கட்கிழமை

Koviloor Digital Library

திருநாவுக்கரசு நாயனார் பெண்ணாகடம் சுடர்க் கொழுந்து நாதரிடம் சூலக்குறியும் இடபக்குறியும் தனது திருமேனியில் பொறிக்கச் செய்த விண்ணப்பம்

பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம்
போற்றிசைக்கும்
என்ஆவி காப்பதற்கு இச்சை உண்டேல் இருங்கூற்று அகல
மின்னார் மூவிலைச்சூலம் என்மேல் பொறித்துவை
துன்னார் கடந்தையுள் தூங்கானைமாடச் சுடர்க்கொழுந்தே

❊ ❊ ❊

இறைவனின் திருவடி தனது தலைமேல் வைக்கச் செய்த விண்ணப்பம்

கோவாய் முடுகி அடுதிறல் கூற்றம் குமைப்பதன்முன்
பூவார் அடிச்சுவடு என்மேல் பொறித்துவை போகவிடின்
மூவா முழுப்பழி மூழ்ங்கண்டாய் முழங்கும் தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையும் சிவக்கொழுந்தே.

திருவடி சூட்டப்பெறுதல்

நினைந்துருகும் அடியாரை நைய்ய வைத்தார்
நில்லாமல் தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுறிவைப் போர்வை வைத்தார்
செழுமதியிள் தளிர் வைத்தார் சிறந்து
வானோர் இனந்துருகி இனமலர்கள்
போதவிழ்ந்து மது வாய்ப்பில்க.
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானார் நல்லவாரே

Koviloor Digital Library

அப்பர் சுவாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

அப்பர் துதி

திருத்தகுசீர் அதிகை அருள் தலத்தின் ஓங்கும்
சிவக்கொழுந்தின் அருட்பெருமைத்
திறத்தாய் வாய்மை
உருத்தகுமெய் உணர்ச்சி வடிவாகிச் சைவ
ஒளிவிளங்க நாவரசென்றொருபேர்பெற்றுப்
பொருத்தமுற உழவாரப் படைகைக் கொண்ட
புண்ணியனே நண்ணியசீர்ப் புனிதனேஎன்
கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக்
கடலேநின் கழல் கருதக் கருதுவாயே

— வள்ளலார்

தேவரெலாம் தொழுந்தலைமைத் தேவர் பாதத்
திருமலரை முடிக்கணிந்து திகழ்ந்து நின்ற
நாவரசே நான்முகனும் விரும்பும் ஞான
நாயகனே நல்லவர்க்கு நண்பனே எம்
பாவமெலாம் அகற்றி அருட் பான்மை நல்கும்
பண்புடைய பெருமானே பணிந்து நின்பால்
மேவவிருப்புறும் அடியார்க்கன்பு செய்ய
வேண்டினேன் அவ்வகைநீ விதித்திட்டாயே.

— வள்ளலார்

Koviloor Digital Library

வள்ளல் பெருமான் துதி

எத்தனைப் பிறவிகள் எடுக்க வைத்தும் பிரமன்
இன்னும் சலிக்க வில்லை
இறப்புத்தொழில் பல இசைத்தும்
அவ்வியமனுக்கு என்பால் இரக்கமில்லை
நித்தமும் விடாது அனுபவிக்கும் முன்செய்த
நீள்வினை ஒழிந்ததில்லை நெஞ்சம்
என்பது கோடி நினைக்கும் தொழிலை
நிமிடமும் மறக்க வில்லை

சித்தமொடு புத்தியும் சிந்தனை விசாரணை
சிறிதும் குறைந்ததில்லை சிறியனேன்
என் செய்வேன் இவ்வகைத் துயரெலாம்
தீர்ந்திடச் செய்தருள் வாய்
சித்தர் பத்தர் பெரும்புலவர்கள் சேர்
வடல்சிற் சபையில் வாழ்
திருவருட் புரவாச மருவும் உத்தமர்நேச
திருவருட்பிரகாசனே

— தொழுவூர் வேலாயுத முதலியார் திருமகன்.

Koviloor Digital Library

வடலூர் இராமலிங்க சுவாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

சற்குரு வணக்கம்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருவுரு சிந்தித்தல்தானே

குருட்டினை நீக்கும் குருவினைக் கூடார்
குருட்டினை நீக்காக் குருவினைக்கூடி
குருடும் குருடும் குருட்டாட்டமாடி
குருடும் குருடும் குழிவிழுமாறே

திருவடி யேசிவ மாவது தேரில்;
திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கில்;
திருவடி யேசெல் கதியது செப்பில்;
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே.

வேட நெறிநிற்போர் வேடம்பூண் டென்பயன்!
வேட நெறிநிற்போர் வேடம்மெய் வேடமே;
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறி செய்தால் வீடது வாகுமே.

ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே.

— திருமந்திரம்

Koviloor Digital Library

Koviloor Digital Library



கோவை சிவப்பிரகாச சுவாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

அருள்நெறி அரசர், இல்லறஞானி,
திருக்கூட்டப்புரவலர், அன்பரு
திரு நா. பூமலை அவர்கள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

இராமலிங்கர் துணை

பண்பு பாராட்டும் உரை

நன்மையும் தீமையும் நாடிநலம் புரிந்த
தன்மையான் ஆளப் படும்

வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின் என திருநாவுக்கரசு நாயனார் அருளாணை இடுகின்றார்கள் இத்தகைய பிறவியின் வழி வாழும் வாழ்க்கையை இரண்டாகப் பகுத்துப் பேசுகின்றது திருக்குறள். ஒன்று இல்லற இயல். பிறிதொன்று துறவறஇயல். இல்லறஇயலுக்கு அன்பையும் துறவறஇயலுக்கு அருளையும் திருக்குறள் உடைமையாக்கியிருக்கின்றது. நல்லறமாம் இல்லறத்தின் வழி நின்று வாழ்வோன் அன்பை ஆதாரமாகக் கொண்டும் துறவு பூண்டு அருள் நாடும் இயற்கை துறவி எவ்வுயிர்க்கும் இரங்கி இதம்புரிதலான அருளை ஆதாரமாகக் கொண்டும் வாழவேண்டும்.

அப்போதுதான் வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மை பெறுகிறது. சைவசித்தாந்தம் துறவறத்திற்கு தனி இடம் தரவில்லை இல்லற இயலின் ஒரு கூறாகவே துறவற இயலைப் பேசுகின்றது "இல்லறத்தில் நின்று நனி முத்தி பெற்றோர் இல்லறத்தில் சிற்றின்ப இயல்பை நீக்கி நல்லறமாம் துறவறத்தில் நின்று வீடு பெற்றோர் என்று சைவ நீதிக் கருவூலமான திருமுறை பேசுகின்றது. இதில் ஏதாவது ஒரு நெறி நின்று வாழ்வதை விட இரு நெறிகளும் அமைய வாழ்வதுதான் விழுமியது. உலக உத்தமர் அகிம்சாமூர்த்தி ஜீவகாருண்யசீலர் அண்ணல் காந்தியடிகள் தனது 36 ஆவது அகவை வரையிலும் இல்லறத்திலும் அதற்கு மேல் இல் இகவாமல் துறவற நெறியின் வாழ்ந்து

Koviloor Digital Library

காட்டினார்கள். அது போல் சன்மார்க்க சீலர் உயர்திரு பூமலை அவர்கள் முதலில் இல்லற நெறியில் நின்று அதற்குரிய பேறுகள் அனைத்தையும் பெற்றவர்கள். அதன் பின் துறவற நெறியின் நின்று இல்லற ஞானியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம் வள்ளற்பெருமான் இத்தகைய வாழ்வு தான் வாழ்ந்து காட்ட விழைந்தார்கள் நாம் செய்த தவக்குறைவு திருவருள் கூட்டுவிக்கவில்லை. உயர்திரு பூமலை அவர்களுக்கு இத்தகைய வாழ்க்கை இயற்கையாக அமைந்து இருக்கிறது. மேலும் ஈதல் இசைபட வாழ்தல் இதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் செல்வத்துப் பயன் ஈதலே என்னும் புறநானூற்றுப் பாடல் அவர்கள் வாழ்க்கையில் உயிர் பெற்றுள்ளது அன்பு நாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மை இவைகள் நிறைந்து விளங்கும் சான்றோராக விளங்குகின்றார்கள் அன்னார் அவர்களின் வாழ்க்கையே பாராட்டுக்குரியதாகின்றது அவர்களும் அவர்களை சார்ந்தோரும் வாழ்க வாழ்க மகிழ்ந்தருட்டுணையால் வாழ்க வாழ்க வளம்பெற வாழ்க

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு

அன்பின்குழவி

கோவை தவத்திரு சிவப்பிரகாசசுவாமிகள்

வடலூர்.

Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார் உழவாரத் திருக்கூட்டம்

13-A1, கச்சேரி சாலை, கள்ளக்குறிச்சி
தெ.ஆ.வ. மாவட்டம்-606 202.

நிர்வாகப் பொறுப்பாளர்கள்

நிரந்தரத் தலைவர்:
எல்லாம் வல்ல சிவபரம் பொருள்

திருக்கூட்ட குருநர்தர்: கோவை தவத்திரு
சிவப்பிரகாச சுவாமிகள் அவர்கள்
சித்திவிளாகம் சுத்தசன்மார்க்கப் பயிற்சி
நிலையம், மேட்டுக்குப்பம், வடலூர்.

அமைப்பாளர்:
சிவ,க. நாச்சியப்பன் அவர்கள்
அரியபெருமானூர், கள்ளக்குறிச்சி (Tk.)
தெ.ஆ.மா. - 606 208.

தலைவர்:
சிவ சோ. பூ. பச்சையா பிள்ளை அவர்கள்
சோமண்டார் கோயில், கள்ளக்குறிச்சி (Tk.)
தெ.ஆ.மா.

Koviloor Digital Library

உபதலைவர்:

சிவ சா. இராமகிருஷ்ண ரெட்டியார் அவர்கள்
பள்ளிப்பட்டு, சூளாங்குறிச்சி (Po)
கள்ளக்குறிச்சி (Tk) தெ.ஆ.மா.

செயலர்:

சிவ சி. பிச்சைப் பிள்ளை அவர்கள்
சோமண்டார் கோயில், கள்ளக்குறிச்சி (Tk)

உபசெயலர்:

சிவ அ. இராஜு அவர்கள்
சோமண்டார் கோயில், கள்ளக்குறிச்சி (Tk)
தெ.ஆ. மாவட்டம்

பொருளர்:

சிவ அ. சின்னத்தம்பி அவர்கள்
ஆலத்தூர் கள்ளக்குறிச்சி (Tk)
தெ.ஆ. மாவட்டம் – 606 208.



Koviloor Digital Library

உ. கோவிலூர் KOVILOOR MADALAYAM

உ

திருக்கூட்டப் புரவலர்கள்

சிவ சன்மார்க்க அரசு N. பூமலை அவர்கள் பரவளூர்

சிவ நாட்டார் N.S. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தேவபாண்டலம்.

சிவ ஆ.பெரியதம்பி மூப்பர் அவர்கள் சடையம்பட்டு

சிவ க. சுந்தர கவுண்டர் அவர்கள் அழகாபுரம்

சிவ க. நாராயண நாட்டார் அவர்கள் புத்தந்தூர்

சிவ P. கந்தன் அவர்கள் சின்ன சேலம்

சிவ S. முருகப்பிள்ளை அவர்கள் தேவியாக்குறிச்சி

சிவ T.P. முனியப்பிள்ளை அவர்கள் சிறுவத்தூர்

சிவ கா. சின்னசாமி அவர்கள் ஆலத்தூர்

சிவ A. இராமசாமி பிள்ளை அவர்கள் சிறுவத்தூர்

சிவ M.S. சுப்ரமணியம் AEE அவர்கள் திருக்கோயிலூர்

சிவ V.S. கணபதியா பிள்ளை அவர்கள் வீரபயங்கரம்

சிவ Dr N. நாராயணசாமி M.B.B.S. அவர்கள் கள்ளக்குறிச்சி

சிவ M. இராசு ஆசிரியர் அ. களத்தூர்

Koviloor Digital Library

திருக்கூட்ட நான்காம் ஆண்டுப் பணி விபரம்

29–10–93 — ஆவுடையார் கோவில் அன்னதானப்பணி

28–11–93 — திருவண்ணமலை அன்னதானப்பணி

19–12–93 — ஆதிதிருவரங்கம் உழவாரப்பணி

30–1–94 — திருநெல்வெண்ணெய் உழவாரப்பணி

27–2–94 — குகையூர் உழவாரப்பணி

26–3–94 — சடையம்பட்டு உழவாரப்பணி

4–4–94 — கள்ளக்குறிச்சி சிவலாய உழவாரப் பணி

24–5–94 — வடலூர் தருமச்சாலை விழாப்பணி

26–6–94 — எலவனசூர்கோட்டை உழ்வாரப்பணி

14–7–94 — சிதம்பரம் ஆனித்திருமஞ்சன அன்னதானப் பணி

31–7–94 — கள்ளகுறிச்சி பெருமாள் கோயில் உழவாரப்பணி

(வளரும்)

தொகுப்பு: திரு. தே கண்ணுசாமி ஆசிரியர் - ஓய்வு
மோ. வன்னஞ்சூர்

Koviloor Digital Library

தொழும் தொண்டர்கள்

திருக்கூட்டப் புரவலர்

நாட்டார் N.S. இராமலிங்கம்

தேவபாண்டலம்

உழவாரத்தை உறுதியாக உழன்று வெற்றிகண்ட
உழவாரைத் துணைகொண்டு உரமனதில் ஏற்றிக் கொண்ட
திருநாவுக்கரசு நாயனார் திருஉள்ளத்தால் மேன்மைகொள்ளும்
திருக்கூட்டம் சூழ்ந்து திருவிழா எடுக்கும் நாளில்
நாடோறும் ஊராரும் நட்புக்கொண்டு
காடோறும் தொண்டுகிழம் காத்து தொண்டு புரியும்
இளையவரும் இளைத்தோரும் இழிவல்ல இத் தொண்டென
மனமது பக்குவத்தோடு மாருத கருத்துக்கொண்டு
உழைக்கின்ற சீர்தொண்டால் உன்னதப் பேறெடுக்க
மழையெனவே வாழவைக்கும் மடாதிபதிகள் எங்கட்கு
சிவத்திரு தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளும்
அருள் நெறிஅரசு ஆனந்த பூமலை ஐயாவும்

Koviloor Digital Library

தேன் மழை சொட்டச்சொட்ட தெவிட்டாத
கருத்துக்களை
கானமழை கருத்தோவியம் காவியக் கருத்துக்களை
இன்றுதிர்க்க வந்தென்றென்றும் இன்பத்தில்
திளைத்திடவே
என்றென்றும் எங்கள் செவி ஏங்கியே
கிடக்குதையா
மனநிறைவு பெறுவதற்கு மார்க்கத்தை அறிந்து
கொண்டோம்
மலைஅளவு தொண்டானாலும் மாட்சிபெறச்
செய்கின்றோம்
பனையளவு கற்றாலும் பதறுது படிக்கின்றோம்
தினையளவு கற்றாலும் திறம்படவே கற்கின்றோம்
உங்கள் அமுத மொழி உய்யவழி கூறுதையா
எங்கள் உயிர்வாழ ஏற்றமிகு வாழ்வளிக்க
தொண்டர்கள் வாழ்க! தொண்டுள்ளம்
வாழ்கவென
வாழ்த்துங்கள் வாழ்கின்றோம் வளமுடன்
வாழ்கவென!

வாழ்த்தி மகிழும்
நாட்டார் N.S. இராமலிங்கம்
தேவபாண்டலம் 15—8—94.

Koviloor Digital Library

ஓம்

திருச்சிற்றம்பலம்

அம்போடு மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என் மனத்தே வைத்தேனே
— அப்பர்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம்
கள்ளக்குறிச்சி.

திருநாவுக்கரசு நாயனார் உழவாரத் திருக்கூட்டம்

நான்காம் ஆண்டு விழா

அழைப்பிதழ்

அக அன்புடையீர்! வணங்கி மகிழ்கின்றோம்.

வளரும் பவ ஆண்டு ஆடி மாதம் 30-ஆம் நாள்
15-8-94 திங்கள்கிழமை
பேரூர் ஆதீனம் குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர்

சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

அவர்களின் சீர்மிகு தலைமையில்
கள்ளக்குறிச்சி ஸ்ரீ சுந்தர விநாயகர் கோயில் தெரு,
ஸ்ரீ நாகப்பிள்ளை திருமண மண்டபத்தில்
ஆண்டு விழா நிகழ உள்ளது

அதுசமயம் தெய்வ நெறி அன்பர்கள் விழாவில் கலந்திருந்து தொண்டு நெறி ஓங்கி வளர ஊக்கமளிக்க வேண்டி வரவேற்று மகிழ்கின்றோம்.

விழா இயக்கம்
திருக் கூட்டக் குருநாதர்
கோவை தவத்திரு **சிவப்பிரகாச சுவாமிகள்**
13-A, கச்சேரி சாலை, கள்ளக்குறிச்சி.

அழைத்து மகிழும்
திருக்கூட்டத் தொண்டர்கள்

Koviloor Digital Library

ஓம்

திருச்சிற்றம்பலம்

நிகழ்முறை

நாள்: பவ ஆண்டு ஆடி 30 திங்கள்கிழமை 15-0-894

இறையரங்கம்

காலை 5-00 மணி – மங்கள இசை

நாதஸ்வர அரசு திரு முத்துசாமி குழுவினர்
சோமண்டார் கோயில்

காலை 5-55 மணி – அணி விளக்கு ஏற்றுதல்

புலவர் திருமதி பேபி பழனியாப் பிள்ளை அவர்கள்
கள்ளக்குறிச்சி

காலை 6-00 மணி – இறை புகழ்

காலை 7-00 மணி – திருவீதிவலம்

தலைமை:

திருக்கூட்ட குருநாத சுவாமிகள்

முன்னிலை:

சிவத்திரு மா. திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள்
பழமலைநாதர் உழவாரத் திருக்கூட்டம், திருமுதுகுன்றம்.

சிவத்திரு வே. சின்னத்தம்பி நாட்டார் அவர்கள்
சிவனருள் திருக்கூட்டம், லால்பேட்டை.

சிவத்திரு இராமலிங்கம் பிள்ளை அவர்கள்
சிவனருள் திருக்கூட்டம், லால்பேட்டை, கா.ம.கோயில்

சிவத்திரு V. சீனியப்பன் அவர்கள்
சிவனருள் திருக்கூட்டம், காட்டுமன்னார் கோயில் வட்டம்.

சிவத்திரு புலவர் அ. சொக்கலிங்கம் அவர்கள்
அப்பரடிகள் சிவநெறி வழிபாட்டு மன்றம்,
விசயமங்கலம், ஈரோடு.

சிவத்திரு அரங்கமணி அவர்கள்
புன்னிரு திருமுறைக் கழகம், நெய்வேலி

Koviloor Digital Library

காலை 9-30 மணி — அருளரங்கம்

அருளாசிகள் வழங்கி விழா மலர் வெளியிடுதல்
பேரூர் ஆதீனம் குரு மகா சந்நிதானம் சீர்வளர்சீர்
சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் கோவை

பகல் 12-00 மணி — இசை அரங்கம்

வடலூர் இசைமுகில் K. புருசோத்தமன் குழுவினரின்
திருவருட்பா இன்னிசை நடைபெறும்.

குருவரங்கம்

மாலை 3-00 மணி குருவழிபாடு

மாலை 3-15 — 4-00 தலைமை உரை:

நலம் சார் புரவலர் அருள் நெறி அரசு
திரு நா. பூமலை அவர்கள் பரவளூர்

மாலை 4-00 — 4-15 முன்னிலை உரை:

திருமிகு வள்ளலார்
வருவர்ய் கோட்டாச்சியர் கடலை

மாலை 4-15 — 4-30 மணி துவக்க உரை:

புலவலர் நாட்டார்
திரு N.S. இராமலிங்கம் பிள்ளை
தேவபாண்டலம்

மாலை 4-30 — 7-00 மணி

குருமொழி திருக்கூட்ட குருநாதர்
கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்

Koviloor Digital Library

பொருள்: சிறியன சிந்தியாதான்
குருவருள் பெறும் திருக்கூட்டப் புரவலர்கள்

சிவத்திரு ஆ பெரியதம்பி மூப்பர் அவர்கள் சடையம்பட்டு
,, க. சுந்தரக்கவுண்டர் அவர்கள் அழகாபுரம்
,, K. நாராயணன் நாட்டார் அவர்கள் புத்தந்தூர்
,, P. கந்தன் அவர்கள் சின்னசேலம்
,, S. முருகப்பிள்ளை அவர்கள் தேவியாக்குறிச்சி
,, T.P. முனியப்பிள்ளை ,, சிறுவத்தூர்
,, இராமசாமிப்பிள்ளை ,,
,, A. இராசு ஆசிரியர் ,, அ களத்தூர்
,, V.S. கணபதியாப்பிள்ளை அவர்கள் வீரபயங்கரம்
,, E. சின்னசாமி ஆசுரியர் ,, எலவனாசூர்கோட்டை
,, மதுரமுத்துப்பிள்ளை அவர்கள் புரிகம்
,, N. கோவிந்தன்பட் ,, கள்ளக்குறிச்சி
,, சோலையாப்பிள்ளை ,, ,,
,, Dr. N. நாராயணசாமி M.B.B.S அவர்கள் காகபிள்ளை திருமண மண்டபம்
,, V. சண்முகம் அவர்கள் கமலா பல்ப் சென்டர்
,, K.M. கந்தசாமி கவுண்டர் அரிசி ஆலை அதிபர்
,, அருணாசலம் பிள்ளை அவர்கள் NSR மண்டி
,, கருணாகரன் ,, வீஜி ஒளி ஒலி

இரவு 7-55 மணி உலகநலன் வேண்டி உலகநாயகன்வழிபாடு

திருக்கூட்ட ஆண்டு விழாவை முன்னிட்டு

ராஜமன்னார்குடி போதை அடிமைகள் மறுவாழ்வு மையம்
பாண்டிச்சேரி தன்வந்திரி மருத்துவமனை

Koviloor Digital Library

சென்னை அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் கல்வி மற்றும் மருத்துவ மையம் ஆகியோர் இணைந்து நடத்தும்

போதைப் பழக்கம், சர்க்கரை வியாதி, தோல் வியாதிகளிடம் இருந்து விடுதலை பெற

ஒரு நாள் இலவச மருத்துவ முகாம்

நாள்: 15 08—94 திங்கள் காலை 9-00 மணிமுதல் மாலை 5-00 மணி வரை

இடம்: நாகப்பிள்ளை திருமண மண்டபம் கள்ளக்குறிச்சி

குடிப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற ராஜமன்னார்குடி Dr. சி, வீரமணி அவர்கள் அக்குபஞ்சர் முறையில் சிகிச்சை அளிப்பார்கள்

சர்க்கரை வியாதி தோல் வியாதிகளுக்கு
Dr. T. கண்ணன் மூலக்குளம், பாண்டி-10.
Dr. தேலூர் மணிவாசகம் திருவாரூர்
ஆகியோர் சிகிச்சை அளிப்பார்கள்

பொதுவான வியாதிகளுக்கு
Dr. K. நாச்சிப்பன் பூட்டை
Dr. K. அண்ணாமலை ஆலத்தூர்
Dr. K. சம்பத் அரசு மருத்துவ அலுவலர் (ஓய்வு)

நலமொழிகள்

1 கனிகளை உண்போம்; பிணிகளை வெல்வோம்
2 காய்களை தின்றால் நோய்கள் போகும்
3 காப்பியும் டீயும் கனவிலும் வேண்டாம்.
4 உப்பு - அது ஒரு தப்பு; புகை – உயிர் பகை; நடை - நோய் தடை

Koviloor Digital Library

பேருரை

திருவாசகத்தை தோத்திர நூலாகவும் திருமந்திரத்தை சாத்திர நூலாகவும் வள்ளற்பெருமான் குறிப்பிட்டுள்ளார்கள். திருவாசகத்தில் நீத்தல் விண்ணப் பத்தில் "கடையவனேனை" கருணையினால் கலந்து ஆண்டு கொண்ட விடையவனே விட்டிடுதி கண்டாய்". அதாவது என்னை கை விட்டுவிடாதே என மாணிக்க வாசகர் வேண்டுகிறார். திருவாசகத்தில் மிகுதியும் தோய்ந்த உள்ளம் கொண்ட நம் வள்ளற்பெருமான் திருவாசக நீத்தல் விண்ணப்பத்திற்கு பேருரை போல கைவிடேல் என்னும் தலைப்பில் அருளியுள்ள திருவருட்பா திருநாவுக்கரசு நாயனார் உழவாரதிருக் கூட்டத்தின் நான்காம் ஆண்டுவிழா மலராக மலர்ந்து பார் எங்கும் மணம் பரப்ப வருகிறது. இதை அன்பர் கள் நாளும் கரதலாகி கசிந்து கண்ணீர்மல்க ஓதினால் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருள் அங்கை நெல்லிக்கனி என்பதில் ஐயமில் இல்லை நாளும் ஓதி அன்பர்களும் தொண்டர்களும் உய்க பெருக அருள்.

அன்புள்ள

கோவை சிவப்பிரகாச சுவாமிகள்

Koviloor Digital Library

இயற்கை துதி

திருநிலைத்தநல் அருளொடும் அன்பொடும்
சிறப்பொடுஞ் செழித்தோங்க
உருநிலைத்திவண் மகிழ்வொடு வாழ்வுற
உவந்துநின் னருள்செய்வாய்
இருநிலத்தவ ரின்புறத் திருவருள்
இயல்வடி வொடுமன்றில்
குருநிலைத்த சற்குருவெனும் இறைவநின்
குரைகழற் பதம்போற்றி

திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம்விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கவொளி சிறந்ததிரு விளக்கே
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளகவரு ளுதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லிமகிழ்ந் தொருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக்
கொழுந்தே.

அன்பெனும் பிடியு ளகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகு மரசே
அன்பெனும் வலைக்குட் படும்பரம் பொருளே
அன்பெனும் கரத்தம ரமுதே
அன்பெனும் கடத்து ளடங்கிடும் கடலே
அன்பெனு முயிரொளி ரறிவே
அன்பெனு மணுவு ளமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே.

Koviloor Digital Library

பள்ளியெழுப்பி இன்பந் தந்தது

தப்படி யெடுத்துக்கொண் டுலகவர் போலே
சாற்றிட மாட்டேனுன் சத்தியஞ் சொன்னேன்
செப்படி வித்தைசெய் சித்தரென் றேதும்
தேவரீர் வல்லபத் திருச்சமு கத்தே
இப்படி வான்முத லெங்கணு மறிய
என்னுட வாதியை யீந்தன னுமக்கே
எப்படி யாயினுஞ் செய்துகொள் கிற்பீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே.

தருணத்துக் கேற்றவா சொல்லிப்பின் மாற்றுந்
தப்புரை யீதன்று சத்தியஞ் சொன்னேன்
கருணைப் பெருக்கினிற் கலந்தென துள்ளே
கனவினும் நனவினுங் களிப்பருள் கின்றீர்
வருணப் பொதுவிலும் மாசமு கத்தென்
வண்பொரு ளாதியை நண்பொடு கொடுத்தேன்
இருணச் சறுத்தமு தந்தர வல்லீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே.

தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கமொன் றில்லார்
மேல்வினை யறிகிலர் வீண்கழிக் கின்றார்
எய்வந்த துன்பொழித் தவர்க்கறி வருள்வீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே.

Koviloor Digital Library

திருவருட்பா

கைவிடேல் எனையே

ஆடக மணிப்பொற் குன்றமே யென்னை
யாண்டுகொண் டருளிய பொருளே
வீடகத் தேற்றும் விளக்கமே விளக்கின்
மெய்யொளிக் குள்ளொளி வியப்பே
வாடகச் சிறியேன் வாட்டங்க ளெல்லாந்
தவிர்த்தருள் வழங்கிய மன்றில்
நாடகக் கருணை நந்தனே யுன்னை
நம்பினேன் கைவிடே லெனையே.

வட்டவான் சுடரே வளரொளி விளக்கே
வயங்குசிற் ஜோதியே யடியேன்
இட்டமே யிட்டத் தியைந்துள கலந்த
இன்பமே யென்பெரும் பொருளே
கட்டமே தவிர்த்திங் கென்னைவாழ் வித்த
கடவுளே கனகமன் றகத்தே
நட்டமே புரியும் பேரரு ளரசே
நம்பினேன் கைவிடே லெனையே

புல்லவா மனத்தே னென்னினுஞ் சமயம்
புகுதவா பொய்ந்நெறி யொழுக்குஞ்
சொல்லவா பிறரைத் துதிக்கவா சிறியேன்
சொப்பனத் தேனு நினையேன்
கல்லவா மனத்தேன் றுறவையுங் கருதேன்
கனகமன் றிலே நடிக்கும்
நல்லவா வெல்லாம் வல்லவா வுனையே
நம்பினேன் கைவிடே லெனையே

Koviloor Digital Library

புண்படா வுடம்பும் புரைபடா மனமும்
பொய்படா வொழுக்கமும் பொருந்திக்
கண்படா திரபகேண்வும் பகலுநின் றனையே
கருத்தில்வைத் தேத்துதற் கிசைந்தன்
உண்பனே யெனினு முடுப்பனே யெனினும்
உலகரை நம்பிலே னெனது
நண்பனே நலஞ்சார் பண்பனே யுனையே
நம்பினேன் கைவிடே லெனையே.

புண்ணிலே புகுந்த கோலெனத் துயரம்
புகுந்தெனைக் கலக்கிய போதுங்
கண்ணிலே யெனது கருத்திலே கலந்த
கருத்தனே நின்றனை யல்லால்
மண்ணிலே வயங்கும் வானிலே பிறரை
மதித்திலேன் மதிக்கின்றார் தமையும்
நண்ணிலேன் வேறொன் றெண்ணிலே னுனையே
நம்பினேன் கைவிடே லெனையே.

ஊன்பெறு முயிரு முணர்ச்சியு மன்பும்
ஊக்கமு முண்மையு மென்னைத்
தான்பெறு தாயுந் தந்தையுங் குருவும்
தனிப்பெருந் தெய்வமுந் தவமும்.
வான்பெறு பொருளும் வாழ்வுநற் றுணையும்
மக்களு மனைவியு முறவும்
நான்பெறு நண்பும் யாவுநீ யென்றே
நம்பினேன் கைவிடே லெனையே.

வாட்டமுந் துயரு மச்சமுந் தவிர்த்தென்
வடிவமும் வண்ணமு முயிருந்
தேட்டமு நீயே கொண்டுநின் கருணைத்
தேகமு முருவுமெய்ஞ் ஞான

Koviloor Digital Library

ஈட்டமு மெல்லாம் வல்லநின் னருட்பேர்
இன்பமு மன்புமெய்ஞ் ஞான
நாட்டமுங் கொடுத்துக் காப்பதுன் கடனான்
நம்பினேன் கைவிடே லெனையே.

வம்பனேன் பிறர்போல் வையமும் வானும்
மற்றவு மதித்திலேன் மதஞ்சார்
உம்பனே ரகங்கா ரந்தவிர்த் தெல்லா
உலகமும் வாழ்கவென் றிருந்தேன்
செம்பொனே கருணைத் தெய்வமே யெல்லாஞ்
செயவல்ல சித்தனே சிவனே
நம்பனே ஞான நாதனே யுனையே
நம்பினேன் கைவிடே லெனையே.

ஆயகா லிருந்து நடந்திட வலியில்
லாமையா லழுங்குவா ரெனவுண்
மேயகா லிருந்துந் திருவரு ளுறவோர்
விருப்பிலா மையின்மிக மெலிந்தேன்
தீயகான் விலங்கைத் தூயமா னிடஞ்செய்
சித்தனே சத்திய சபைக்கு
நாயகா வுயிர்க்கு நாயகா வுனையே
நம்பினேன் கைவிடே லெனையே.

அற்றமு மறைக்கு மறிவிலா தோடி
யாடிய சிறுபரு வத்தே
குற்றமுங் குணங்கொண் டென்னையாட் கொண்ட
குணப்பெருங் குன்றமே குருவே
செற்றமும் விருப்புந் தீர்ந்தமெய்த் தவர்தஞ்
சிந்தையி லினிக்கின்ற தேனே
நற்றக வுடைய நாதனே யுனையே
நம்பினேன் கைவிடே லெனையே.

Koviloor Digital Library

படம்புரி பாம்பிற் கொடியனேன் கொடிய
பாவியிற் பாவியேன் தீமைக்
கிடம்புரி மனத்தே னிரக்கமொன் றில்லேன்
என்னினுந் துணையெந்த விதத்துந்
திடம்புரி நின்பொன் னடித்துணை யெனவே
சிந்தனை செய்திருக் கின்றேன்
நடம்புரி கருணை நாயகா வுனையே
நம்பினேன் கைவிடே லெனையே

படித்தன னுலகப் படிப்பெலா மெய்ந்நூல்
படித்தவர் தங்களைப் பார்த்து
நொடித்தனன் கடிந்து நோக்கினேன் காம
நோக்கினேன் பொய்யர்தம் முறவு
பிடித்தன னுலகிற் பேதையர் மயங்கப்
பெரியரிற் பெரியர்போற் பேசி
நடித்தன னெனினு நின்னடித் துணையே
நம்பினேன் கைவிடே லெனையே.

பஞ்சுநே ருலகப் பாட்டிலே மெலிந்த
பாவியேன் சாவியே போன
புன்செயே யனையேன் புழுத்தலைப் புலையேன்
பொய்யெலாம் பூரித்த வஞ்ச
நெஞ்சினேன் பாப நெறியினேன் சினத்தில்
நெடியனேன் கொடியனேன் காம
நஞ்சினே னெனினு மஞ்சினே னுனையே
நம்பினேன் கைவிடே லெனையே.

கயந்துளே வுவட்டுங் காஞ்சிரங் காயிற்
கடியனேன் கர்மமே கலந்து
வியந்துளே மகிழும் வீணனேன் கொடிய
வெகுளியேன் வெய்யனேன் வெறியேன்

Koviloor Digital Library

மயர்ந்துளே னுலக வாழ்க்கையை மனையை
மக்களை யொக்கலை மதித்தே
நயந்துளே னெனினும் பயந்துளே னுனையே
நம்பினேன் கைவிடே லெனையே

ஓடினேன் பெரும்பே ராசையா னுலகில்
ஊர்தொறு முண்டியே யுடையே
தேடினேன் காமச் சேற்றிலே விழுந்து
தியங்கினேன் மயங்கினேன் திகைத்து
வாடினேன் சிறிய வாரியான் மகிழ்ந்தேன்
வஞ்சமே பொருளென மதித்து
நாடினே னெனினும் பாடினே னுனையே
நம்பினேன் கைவிடே லெனையே

காட்டிலே திரியும் விலங்கினிற் கடையேன்
கைவழக் கத்தினொ லொடிந்த
ஓட்டிலே யெனினு மாசைவிட் டறியேன்
உலுத்தனே னொருசிறு துரும்பும்
ஏட்டிலே யெழுதிக் கரைத்திட்ட கொடியேன்
எச்சிலு முமிழ்ந்திடே னரக
நாட்டிலே பெரியே னென்னினு முனையே
நம்பினேன் கைவிடே லென்னையே

துனித்தவெம் மட்வார் பகல்வந்த போது
துறவியிற் கடுக்கடுத் திருந்தேன்
தனித்திர விதிலே வந்தபோ தோடித்
தழுவினேன் தடமுலை விழைந்தேன்
இனித்தசொல் புகன்றே னென்பினை கறித்தே
இடர்பட்ட நாயென விளைத்தேன்
நனித்தவ றுடையே னென்னினு முனையே
நம்பினேன் கைவிடே லென்னையே

Koviloor Digital Library

தார்த்தட முலையார் தான்பல ரொடுஞ்சார்
தலத்திலே வந்தபோ தவரைப்
பார்த்திலேன் வார்த்தை பகர்ந்திலேன் தவசுப்
பாதகப் பூனைபோ லிருந்தேன்
பேர்த்துநான் றனித்த போதுபோய் வலிந்து
பேசினேன் வஞ்சரிற் பெரியேன்
நார்த்திட குளத்தே னென்னினு முனையே
நம்பினேன் கைவிடே லெனையே.

பெண்மையே விழைந்தே னவர்மன மறியேன்
பேயெனப் பிடித்தனன் மடவார்க்
குண்மையே புகல்வான் போன்றவர் தமைத்தொட்
டுவந்தகங் களித்தபொய் யுளத்தேன்
தண்மையே யறியேன் வெம்மையே யுடையேன்
சாத்திரம் புகன்றுவாய் தடித்தேன்
நன்மையே யடையே னென்னினு முனையே
நம்பினேன் கைவிடே லெனையே

வன்மையிற் பொருண்மே லிச்சையில் லவன்போல்
வாதிபோல் வார்த்தைகள் வழங்கி
அன்மையிற் பிறர்பா லுளவினாற் பொருளை
அடிக்கடி வாங்கிய கொடியேன்
இன்மையுற் றவருக் குதவிலேன் பொருளை
எனைவிடக் கொடியருக் கீந்தேன்
நன்மையுற் றறியே னென்னினு முனையே
நம்பினேன் கைவிடே லெனையே

கட்டமே யறியே னடுத்தவ ரிடத்தே
காசிலே யாசையில் லவன்போற்
பட்டமே காட்டிப் பணம்பறித் துழன்றேன்
பகலெலாந் தவசிபோ லிருந்தேன்

Koviloor Digital Library

இட்டமே யிரவி லுண்டயல் புணர்ந்தே
இழுதையிற் றூங்கினேன் களித்து
நட்டமே புரிந்தே னென்னினு முனையே
நம்பினேன் கைவிடே லெனையே.

காணியே கருதுங் கருத்தினைப் பிறர்க்குக்
காட்டிடா தம்பலா மடங்குந்
தூணியே யெனச்சார்ந் திருந்தனன் சோற்றுச்
சுகத்தினாற் சோம்பினே னுதவா
ஏணியே யனையே னிரப்பவர்க் குமியும்
சந்திலே னீந்தவ னெனவே
நாணிலே னுரைத்தே னென்னினு முனையே
நம்பினேன் கைவிடே லெனையே.

அடுத்தவர் மயங்கி மதித்திட நினைத்தேன்
அடிக்கடி பொய்களே புனைந்தே
எடுத்தெடுத் துரைத்தே னெனக்கெதி ரிலையென்
றிகழ்ந்தன னகங்கரித் திருந்தேன்
கொடுத்தவர் தமையே மிகவுப சரித்தேன்
கொடாதவர் தமையிகழ்ந் துரைத்தேன்
நடுத்தய வறியே னென்னினு முனையே
நம்பினேன் கைவிடே லெனையே.

எளியவர் வளைத்த நில்மெலாங் கவரும்
எண்ணமே பெரிதுளேன் புன்செய்க்
களியுணு மனையிற் சர்க்கரை கலந்து
காய்ச்சுபால் கேட்டுண்ட கடையேன்
துளியவர்க் குதவேன் விருப்பிலான் போலச்
சுவைபெறச் சுவைத்தநாக் குடையேன்
நனிரெனச் சுழன்றே னென்னினு முனையே
நம்பினேன் கைவிடே லெனையே.

Koviloor Digital Library

கொலைபல புரிந்தே புலைநுகர்ந் திருந்தேன்
கோடுறு குரங்கினிற் குதித்தே
அலைதரு மனத்தே னறிவிலே னெல்லாம்
அறிந்தவன் போற்பிறர்க் குரைத்தேன்
மலைவுறு சமய வலையகப் பட்டே
மயங்கியு மதியினே னல்லோர்
நலையல் வெனவே திரிந்தன னெனினும்
நம்பினேன் கைவிடே லென்னையே

ஈயெனப் பறந்தே னெறும்பென வுழன்றேன்
எட்டியே யெனமிகத் தழைத்தேன்
பேயெனச் சுழன்றேன் பித்தனே யெனவாய்ப்
பிதற்றொடு மூர்தொறும் பெயர்ந்தேன்
காயெனக் காய்த்தேன் கழையென நடந்தேன்
கல்லெனக் கிடந்தனன் குரைக்கும்
நாயெனத் திரிந்தே னென்னினு முனையே
நம்பினேன் கைவிடே லென்னையே

ஒன்றியே யுணவை யுண்டுடல் பருத்த
ஊத்தையே னாத்தழும் புறவே
வென்றியே யுரைத்து வினைகளே விளைத்த
வீணனே னூர்தொறுஞ் சுழன்ற
பன்றியே யனையேன் கட்டுவா ரற்ற
பகடெனத் திரிகின்ற படிறேன்
நன்றியே யறியே னென்னினு முனையே
நம்பினேன் கைவிடே லென்னையே

கலையெலாந் தவிர்ந்த வெறுமர மனையேன்
கள்ளனேன் கள்ளுண்ட கடியேன்
சுவையெலாம் விரும்பிச் சுழன்றதோர் கீழ்மையேன்
துட்டனேன் தீதெலாந் துணிந்தேன்

Koviloor Digital Library

இவையெலா மந்நா ளுடையனோ வலனோ
இந்தநா ளிறைவநின் னருளால்
நவையெலாந் தவிர்ந்தேன் தூயனாய் நினையே
நம்பினேன் கைவிடே லெனையே

அவா அறுத்தல்

சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடி லொருவன்
றுன்னுநற் றவமெலாஞ் சுருங்கி
ஆற்றிலே கரைத்த புளியெனப் போமென்
றறிஞர்க ளுரைத்திடல் சிறிதும்
போற்றிலே னுன்னைப் போற்றிலேன் சுவையிற்
பொருந்திய காரசா ரஞ்சேர்
சாற்றிலேக லந்த சோற்றிலே யாசை
தங்கினே னென்செய்வே னெந்தாய்

விருப்பிலேன் போலக் காட்டினே னன்றி
விலைவிலா தூணெலா மறுத்த
கருப்பிலே யெனினுங் கஞ்சியா திகளைக்
கருத்துவந் துண்ணுதற் கமையேன்
நெருப்பிலே யுருக்கு நெய்யிலே சிறிதும்
நீரிடாத் தயிரிலே நெகிழ்ந்த
பருப்பிலே சோற்றுப் பொருப்பிலே யாசை
பற்றினே னென்செய்வே னெந்தாய்

உறியிலே தயிரைத் திருடியுண் டனனென
றொருவனை யுரைப்பதோர் வியப்போ
குறியிலே யமைத்த வுணவெலாந் திருடிக்
கொண்டுபோ யுண்டனன் பருப்புக்

Koviloor Digital Library

கறியிலே பொரித்த கறியிலே கூட்டுக்
கறியிலே கலந்த பேராசை
வெறியிலே யுனையு மறந்தனன் வயிறு
வீங்கிட வுண்டன னெந்தாய்

கீரையே விரும்பேன் பருப்பொடு கலந்த
கீரையே விரும்பினேன் வெறுந்தண்
ணீரையே விரும்பேன் தெங்கிளங் காயின்
நீரையே விரும்பினேன் னுணவில்
ஆரையே யெனக்கு நிகரெனப் புகல்வேன்
அய்யகோ அடிச்சிறு நாயேன்
பேரையே யுரைக்கிற் றவமெலா மோட்டம்
பிடிக்குமே யென்செய்வே னெந்தாய்

பாலிலே கலந்த சோறெனில் விரைந்தே
பத்தியா லொருபெரு வயிற்றுச்
சாலிலே யடைக்கத் தடைபடேன் வாழை
தகுபலா மாமுதற் பழத்தின்
தோலிலே யென்னினுங் கிள்ளியோர் சிறிதுஞ்
சூழ்ந்தவர்க் கீந்திடத் துணியேன்
வாலிலே னிருக்கில் வனத்திலே யிருக்க
வாய்ப்புளே னென்செய்வே னெந்தாய்.

உண்டியே விழைந்தே னெனினுமென் றன்னை
உடையவா வடியனே னுனையே
அண்டியே யிருந்தே னிருக்கின்றே னிருப்பேன்
அப்பநின் னுணைநின் றனக்கே
தொண்டுறு தவர்கைச் சோற்றினை விரும்பேன்
தூயனே துணைநினை யல்லாற்
கண்டிலே னென்னைக் காப்பதுன் கடன்காண்
கைவிடேல் கைவிடே லெந்தாய்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

திருக்கூட்டத்தின் செயல்கள் விபரம்

- அன்னதானம் செய்தல், தண்ணீர்பந்தல் அமைத்தல்
- உயிர்ப்பலி தடுத்தல்
- இரத்ததானம் கண்தானம் கொடுத்தல்
- வழிபாட்டு மன்றங்கள் அமைத்தல்
- அருள் நூல்கள் வெளியிடுதல்
- கல்விப் பணிகள் செய்தல்
- தலங்கள் யாத்திரை செய்தல்
- குருபூஜை விழாக்கள் ஆண்டு விழா செய்தல்
- நோய்களுக்கு இலவச மருத்துவம் செய்தல்
- ஆலய குடமுழுக்கு சன்மார்க்க முறையில் செய்தல்
- சன்மார்க்க முறைத் திருமணங்கள் செய்தல்
- ஆதரவற்ற ஏழை மணமக்களுக்கு திருமணம் செய்தல்
- பிறர் துயர் களைய அவர் இல்லம் சென்று வழிபாடு செய்தல்
- உலக நலன் வேண்டி சிறப்பு வழிபாடு செய்தல்
- சாதிமத இன மொழி வேறுபாடு களைதல்
- பிரதி ஆங்கில மாத கடைசி ஞாயிறு தோறும் குறிப்பிடும் ஆலயங்களில் உழவாரப்பணி செய்தல்

KOVILOOR

மேலும் விபரங்களுக்கு,

இ. நாச்சியப்பன்
திருக்கூட்ட அமைப்பாளர்
அரியபெருமானூர் - 606 208
கள்ளக்குறிச்சி

சாயி இராமகிருஷ்ணா, சிதம்பரம்.